மன்னார்கோயில் சாலையை மேம்படுத்தினாலே போதும் என்று துறை கருதுகிறது. அப்படிச் செய்கின்றபோது துறைக்குச் செலவும் குறைவாக இருக்கும். உறுப்பினருடைய கோரிக்கையும் நிறைவேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தச் சாலையை அகலப்படுத்துவது சம்பந்தமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 528, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

528—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி தொடங்குதல்.

*23062—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு, கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயக் கல் லூரி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் 75 சதவீதம் விவசாயம் செய்கிறார்கள். முக்கியப் பயிர்களான நெல், கரும்பு, வேர்க்கடலை, பருத்தி, வாழை முதலியவைகளைப் பயிர் செய்துகொண்டிருக்கிறார்கள். விவசாயம் சம்பந்தமான பட்டப்படிப்பு படிக்கவேண்டுமென்றால், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், பவானி, சிதம்பரம் ஆகிய இடங்களுக்குச் சென்று படிக்கவேண்டியிருக்கிறது. அந்த இடங்களுக்குச் சென்று படிக்க எங்கள் மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு மிகவும் சிரமம் உள்ளதால் வசதி உள்ளவர்கள்தான் படிக்க முடிகிறது. நடுத்தர மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று படிப்பதற்கு அவர்களை அனுப்ப முடிவதில்லை. எங்கள் மாவட்ட விவசாய மக்கள் மீது அன்பையும், பாசத்தையும் வைத்துள்ள நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அரசு வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயக்

1994 மே 5]

கல்லூரி ஏற்படுத்தினால், விவசாயிகள் மிகவும் வளர்ச்சியுடைய வாய்ப்பு ஏற்படும். எனவே, விவசாயக் கல்லூரி அமைக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு 500 ஏக்கர் நிலம் தேவை. அதற்கு 6 கோடி ரூபாய் பணம் தேவை. இன்றைக்கு நம்முடைய அரசினுடைய நிதிநிலைமையில் அதிகமாக செலவிடக் கூடிய வாய்ப்புகள் இல்லை என்பது மாண்புமிகு உறுப்பினருக்கு நன்கு தெரியும். ஏற்கெனவே, 2000 வேளாண்மைப் பட்டதாரிகள் படித்துப் பட்டம் பெற்று வேலைவாய்ப்புகள் இன்றி வேலை தேடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில் புதியதாக ஒரு வேளாண்மைக் கல்லூரியைத் துவக்குவது என்பது அரசால் இயலாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 529, திருமதி. வி. ஜி. மணிமேகலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

529—

அருப்புக்கோட்டை தொகுதி, காரியா பட்டியில் பயிரிட புதிய ரக வெங்காயம் கண்டுபிடித்தல்.

*23157— திருமதி. வி. ஜி. மணிமேகலை:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி, காரியா பட்டி ஒன்றியத்தில் வெங்காயம் அதிகமாக விளைவதால் அங்கு பயிரிட புதிய ரக வெங்காயம் கண்டுபிடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அருப்புக்கோட்டை தொகுதியில் காரியாபட்டி ஒன்றியத்தில் வெங்காயம் அதிகமாக விளைவதால் அங்கு பயிரிட வேண்டிய புதிய ரக வெங்காயம் கண்டுபிடிக்கும் திட்டம் அரசிடம் இல்லை.